செய்தி வெளியீடு எண்: 031 நாள்: 13.01.2020

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (13.1.2020) தலைமைச் செயலகத்தில், 8.1.2020 அன்று இரவு இரண்டு நபர்களால் கைத்துப்பாக்கியால் சுடப்பட்டும், கத்தியால் குத்தப்பட்டும் உயிரிழந்த கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு சிறப்பினமாக தமிழ்நாடு அரசின் சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

தமிழ்நாடு–கேரள மாநில எல்லையான கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை சோதனை சாவடியில் 8.1.2020 அன்று இரவு 8 மணி முதல் பணியில் இருந்த களியக்காவிளை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் என்பவரை, இரவு சுமார் 9.30 மணியளவில் அங்கு வந்த இரண்டு நபர்கள், கைத்துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்திவிட்டும் தப்பிச் சென்றனர். இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வில்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அன்னாரது குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிக்கு ஏற்றாற்போல், கருணை அடிப்படையிலான அரசுப் பணி வழங்கப்படும் என்றும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வில்சன் அவர்களின் உயரிய தியாகத்தைக் கருத்தில் கொண்டு சிறப்பினமாக அன்னாரது குடும்பத்திற்கு நிவாரண உதவியாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும் 10.1.2020 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு சிறப்பினமாக தமிழ்நாடு அரசின் சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.என். தளவாய் சுந்தரம், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

• • • • •

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**